**இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.**

**O.S. No. 69/2021**

**Date : 24.04.2026**

**வா.சா. 1 – வென்சன் கிங்ஸ்லி**

**Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873.**

**2 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.**

நான் இவ்வழக்கில் புத்தலம் CSI சர்ச்சில் எனது உறுப்பினர் என்ற பெயரில் உரிமைக்கோரி எவ்வித பரிகாரமும் கேட்கவில்லை என்றால் சரியல்ல. CSI சர்ச்சின் பிஷப் 2021 ம் வருட தேர்தலில் எனது உரிமையை மறுத்தார்கள் என்றால் சரிதான். பின்பு நீதிமன்றத்தின் அனுமதியோடு பங்கு கொண்டு வெற்றி பெற்றேன். இவ்வழக்கில் 3 ம் பரிகாரத்தில் கூறியுள்ள 27.02.2021 ம் ஆண்டு நடந்த தேர்தலில் நியமிக்கப்பட்ட பதவிக்கான மூன்று ஆண்டு காலங்கள் நிறைவு பெற்றுவிட்டது என்றால் சரியல்ல. இவ்வழக்கு நிலுவையிலுள்ளது. இவ்வழக்கு நிலுவையிலிருக்கும் சமயத்தில் புதிதாக 2024 முதல் 2027 வருடத்திற்கான தேர்தல் நடத்தப்பட்டு என்னை தவிர 12 டீக்கன்மார்கள் (கமிட்டி மெம்பர்ஸ்) தேர்ந்தெடுக்கப்பட்டு செயல்பட்டு வருகிறார்கள் என்றால் சரிதான்.

மேற்படி 12 தேர்ந்தெடுக்கப்பட்ட டீக்கன்மார்களை நான் இவ்வழக்கில் கட்சி சேர்க்கவில்லை என்றால் அதற்கு முன்பாகவே வழக்கு தாக்கல் செய்துவிட்டேன். அ.வ.எண் 29/2024 ல் மேற்படி 12 தேர்ந்தெடுக்கப்பட்ட டீக்கன்மார்களை நான் இவ்வழக்கில் கட்சி சேர்க்கவில்லை என்றால் தேவைப்படவில்லை. CSI விதிமுறைகள் செல்லாது என்று கோரி விளம்புகை பரிகாரம் கேட்டு இவ்வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி CSI விதிமுறைகள் தான் நானும் சர்ச்சின் உறுப்பினர்களும்

பின்பற்றி வருகிறோம் என்றால் சரிதான்.

25.05.2021 அன்று சர்ச்சிலிருந்து பிஷப் ஆணையின் பெயரில் என் மீது விசாரணை மேற்கொண்டார்கள். அதில் நான் ஆஜரானேன் என்றால் சரிதான். மேற்படி விசாரணையில் என்னுடைய தேர்தலில் பங்கு பெறும் உரிமை மற்றும் தகுதிக்கான கேள்விகள் கேட்கப்பட்டது என்றால் சரிதான். எழுத்து மூல பதிலளித்தேன். மேற்படி விசாரணை மேற்கொள்ள சர்ச்சின் பிஷப் மற்றும் ஒரு கமிட்டி மெம்பருக்கு அதிகாரம் உள்ளது என்றால் சரிதான். 2021 முதல் 2024 ம் ஆண்டுக்கான தேர்தலை 22.04.2021 ல் நடப்பதாக 05.10.2020 ல் அறிவிப்பு கொடுத்தார்கள் என்றால் சரிதான்.

பிஷப் அரசு வழக்கறிஞர் மற்றும் டயாஸிஸின் சட்ட ஆலோசகரிடமிருந்தும் சட்ட ஆலோசனை கேட்டு எனக்கு அனுப்பினார் என்றால் சரிதான். நான் அதனை மறுபரீசலனை செய்யக் கோரி பதிலளித்தேன். மறுபரிசீலனைக்கு பணம் செலுத்த வேண்டுமா என்றால் தேவையில்லை. மேற்படி மறுபரிசீலனைக்கான பதில் என்றைய தினம் அனுப்பினேன் என்றால் ஞாபகம் இல்லை. தேர்தல் குறித்த விசாரணைகள் குறுகலான நடைமுறையில் நடைபெறும் என்றால் அவ்வாறு விசாரணை நடைபெறவில்லை. 2021 தேர்தல் நிர்ணயிக்கப்பட்ட தேதியில் நடைபெறக்கூடாது என நான் ஆட்சேபனை எதுவும் தெரிவித்து தேர்தல் நிறுத்தப்படவில்லை என்றால் சரிதான்.

எனது சொந்த பிரச்சனை மற்றும் திருமணம் மற்றும் குழந்தைகள் குறித்த பிரச்சனைகள் குறித்து மனு எதுவும் தாக்கல் செய்தார்களா என்றால் எட்வின் என்பவர் பிஷப்பிடம் கொடுத்தார். அதற்கான விளக்கமும் நான் கொடுத்துவிட்டேன். நான் அம்மான்டி விளை CSI சர்ச்சில் 1990 முதல் 1999 வரை சர்ச் வொர்க்கர்ராக பணிபுரிந்து வந்தேன் என்றால் சரிதான். CSI விதிமுறைகளின் பக்கம் 11 ல் விதி 17 ன்படி சர்ச்

வொர்க்கர் தேர்தலில் பங்கு பெற தடை உள்ளது என்றால் சரியல்ல. 26.02.2021 தேர்தலில் எனது உரிமையை நிராகரித்ததால் தான் நான் இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் சர்ச் வொர்க்கராக பணியாற்றி சம்பளம் வாங்கிய காரணத்தால் தான் என்னை 2021ம் தேர்தலிலிருந்து நீக்கினார்கள் என்றால் சரியல்ல. நான் சர்ச்சில் பணியாற்றி விட்டு பின்பு அதே சர்ச்சிலோ வேறு சர்ச்சிலோ நிர்வாகியாக வர முடியாது என்றால் சரியல்ல.

நான் தாக்கல் செய்துள்ள CSI விதிமுறைகளை நான் படித்து பார்த்துள்ளேன். அவை அனைத்தும் சரிதான் என்றால் சரிதான். நான் எனது வழக்கை பின்னோக்கி நடத்த வேண்டி அ.வ.எண் 29/2024 தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ஆகையால் நான் தாக்கல் செய்துள்ள 2 வழக்குகளையும் எவ்வித மூல காரணமும் இல்லாமல் தாக்கல் செய்துள்ளேன். ஆகையால் இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**<u>2 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.</u>**